# மெய்யியலில் அரசியல் என்ற எண்ணக்கரு - திருக்குறளைச் சிறப்பாதாரமாகக் கொண்ட ஓர் ஆய்வு

**S.Jeganathan**
Faculty of Arts,
Eastern Univeriity, Sri Lanka

## ஆய்வுச் சுருக்கம்

மெய்யியல் என்பது தனக்கென தனியானதொரு ஆய்வு விடயத்தினைக் கொண்ட தனித்துவமான ஆய்வுத்துறை அல்ல. மாறாக இதனுடைய ஆய்வுப்பரப்பு பரந்துபட்டதாக உள்ளது. மனிதனுடைய சிந்தனையில் தோன்றிய அனைத்து ஆய்வுத்துறைகளிலுமுள்ள உள்ளார்ந்த விடயங்களுடனும் தொடர்புபட்டு அவை தொடர்பான நியமம் கூறும் தன்மையிலான ஆய்வினை மேற்கொள்ளும் ஒரு துறையாக மெய்யியல் காணப்படுவதால் இது இரண்டாம்நிலை ஆய்வாக அடையாளப்படுத்தப்படுகிறது. அந்த வகையில் மெய்யியல் அரசியல் என்ற எண்ணக்கருவை ஆய்வுக்குட்படுத்தியது. அரசியல் தொடர்பான ஒட்டுமொத்தமான மெய்யியல்சார் அணுகுமுறையினை 'அரசியல் மெய்யியல்' என்ற மெய்யியற்கிளை விளக்குகிறது. அரசியலை வரையறுக்கும் போது, அரசாங்கமும் அதில் அடங்கியுள்ள பல்வேறு நிறுவனங்களும் எவ்வாறு இயங்குகின்றன என்பதை சட்ட திட்டங்களுக்கு அமைய நோக்குவது எனக் கூறலாம். இந்த அரசியல்சார் விடயங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசியல் கருத்துடன்பாடுகள், நம்பிக்கைகள், கொள்கைகள் என்பன தொடர்பான விமர்சன விபரிப்பினை மேற்கொள்ளும் ஒரு முறைமையான மாதிரி அல்லது தொகுதி அரசியல் மெய்யியல் என்று குறிப்பிடலாம். மேலும் அரசியல் மெய்யியலின் சாரம் ஒருவகையில் பிரயோக ஒழுக்கவியலை நோக்கி நகர்வதைக் காணலாம். திருக்குறளைக் கற்றவன் தமிழருடைய மெய்யியல் சிந்தனைகள் பற்றி சிறப்பாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். வள்ளுவரின் மெய்யியல் கருத்துக்கள் மேலைத்தேய மெய்யியற் சிந்தனையாளர்களின் கருத்துக்களைவிட சிறப்பானதாக காணப்படுவதனால்தான் 80 மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோடு, மேலைத்தேயத்தவர்களும் பின்பற்றுகின் றமையும் காணலாம். அந்த அடிப்படையில் மெய்யியலில் அரசியல் எண்ணக்கரு எவ்வாறு அணுகப்பட்டுள்ளது என்பதை விளக்கி அந்த விடயம் எவ்வாறு திருக்குறளில் காணப்படும் அரசியல் கருத்துக்களோடு தொடர்புபடுகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதனூடாக தமிழர்களின் மெய்யியற் சிந்தனையினை வெளிக்கொணர இந்த ஆய்வு முனைகிறது.

**திறவுச்சொற்கள் :** அரசியல் மெய்யியல், பிரயோக ஒழுக்கவியல், தமிழர் மெய்யியல், இரண்டாம்நிலை ஆய்வு